# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 39 | இதழ் 04 | 2023 - பங்குனி மாத பதிப்பு


# சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்



2023ம் ஆண்டின் மகளிர் தினத்தை மையமாகக் கொண்டு, டாபிந்து கூட்டமைப்பினால் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் திகதி கட்டுநாயக்க, பியகம ஆகிய வர்த்தக வலயங்களை மையமாகக் கொண்டும், அதே போன்று வவுனியா மற்றும், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டும் இடம்பெற்றது. இதன் இவ்வருட கருப்பொருள் யாதெனில், "சமத்துவத்தை தழுவுவோம்" என்பதாகும். இக்கொண்டாட்டங்களுடன் இணைந்து, டாபிந்து கூட்டமைப்பு அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய சிவில் அமைப்புக்களையும் ஒன்றிணைத்து போராட்ட நிகழ்வையும் நடத்தியது.

அதனைத் தொடர்ந்து, மகளிர் தினக் கொண்டாட்டமானது, கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்கள் நூற்றுக்கும் அதிகமானோர் மற்றும் ஏனைய சிவில் அமைப்பு பிரதிநிதிகள் முப்பதுக்கும் அதிகமானோரின் பங்களிப்புடன், குரண வைட் பெலஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. வழமைபோல், மங்கள விளக்கேற்றி, வரவேற்பு நடனத்துடன் விழா இனிதே ஆரம்பமாகியதுடன், டாபிந்து கூட்டமைப்பின் நிர்வாகத் தலைவர் சமிலா துஷாரி அவர்களால் அன்றைய நாளுக்கான நோக்கம் தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் அவர்மூலம், நாட்டின் தற்கால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெண் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பொருட்களின் விலைகளுக்கு மத்தியில் தமக்கு கிடைக்கின்ற சம்பளத்தை சமாளித்துக் கொண்டு, வாழ்க்கைச்

8ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – சட்ட அறிவு
பக்கம் 04 – பெண்கள் மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம்
பக்கம் 05 – சர்வதேச மகளிர் தினம் - 2023
பக்கம் 06-07 – எமது பணி
பக்கம் 8 – மகளிர்தினக் கொண்டாட்டம் தொடர்ச்சி
பக்கம் 09 – வெளிநாட்டுச் செய்திகள் / ஆரோக்கியம்
பக்கம் 10 – எமது எண்ணம்
பக்கம் 11 – புத்தாண்டிற்கு சம்பளம்கூட கிடைக்கப்பெறாத ஆடைத்தொழிற்சாலைப் பெண்கள்

வியர்வைத்துளி கூட்டமைப்பு
221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:

# வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தின் மனித நெருக்கடி

தற்போதளவில் சுதந்திர வர்த்தக வலயம் உட்பட நாட்டின் தனியார்துறை மற்றும் அரச துறையும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர்.

நாட்டின் முதன்மையான தொழிற்சாலைகளை மூடுவதற்கும், குறைந்த கால விடுமுறையை வழங்குவதற்கும், தொழில் நீக்கம் செய்வதற்கும், வருடாந்த வெகுமதி சலுகை கொடுப்பனவுகளை வெட்டுவதற்கும், இவற்றை தீர்ப்பதற்காக தொழிலாளர் திணைக்களம் பற்றிய அறிவு இன்மையால் ஜனநாயக விரோதமாக செயல்படுவதால் களத்தினுள் குழப்பநிலை காணப்படுகினறது.

ஆட்சிமுறை அதிகாரப்படுத்தலின் பிரதிநிதித்துவமானது, கருத்து வெளியிடும், கூட்டங்கள் மற்றும் சங்கங்களின் சுதந்திரத்திற்காக வேலியடைத்து, வன்முறையை இல்லாதொழிக்கும் கட்டளையை அறிமுகப்படுத்துவதோடு, நாம் செய்ய வேண்டியது, தொழிற்சங்களின் முதல் உரிமைகளுக்கு வேலி கட்டுவதாகும். தொழிற்சங்கங்களுக்கு தலையிடும் நபர்கள் ஒழுங்கமைப்பு தீவிரவாதிகளாக கருதப்படுவதுடன், இருபது ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை பெற்றுக் கொள்ளும் குற்றவாளிகளாகவும் கருதப்படுவது சிறப்பம்சமாகும்.

அடக்குமுறையினூடாக, சிறைப்படுத்துவதனூடாக மக்கள் எதிர்ப்புக்களுக்கு வேலி அடைக்க மேற்கொள்ளும் இம்முயற்சியானது, தவறான கொள்கையில், மோசடியில், துஷ்பிரயோகத்தில் காணப்படும் கடினமான நிலைமைகள் காரணமாக மேற்கொள்ளப்பட்டதேயன்றி, நாட்டு பிரஜைகளின் தவறால் நடந்ததோ அல்லது நாட்டு மற்றும் பூகோள ரீதியான பிரச்சினைகளால் நடைபெறாமையினால் நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்லும் பொறுப்பை ஏற்க வேண்டியது ஆட்சியாளர்களே. பொருளாதாரத்தில், நிர்வாகத்தில், கெடுதல் நிகழ்கின்ற வரை, இந்நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ளும் வரை நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பது பற்றி நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

வரி செலுத்துவது, நாட்டின் முன்னேற்றத்திற்கு ஓர் வழிமுறையாக இருப்பதுடன், அசாதாரண முறையில் வரிவிதித்து, ஒடுக்கப்பட்டோருக்கு பாரிய சுமையொன்றை சுமக்கச்செய்து, மின்கட்டணத்தை அதிகரிப்பதிலிருந்து, பெரும் செலவொன்றை கீழ்த்தர வகுப்பினர் எதிர்நோக்க நேர்ந்திருப்பது, பாரிய அசாதாரண செயலாகும்.

நற்சிறந்த பொருளாதாரம், அரசியல், சமூக, கலாசார அபிவிருத்தி முறையொன்றை மற்றும் சகோதரத்துவம், ஒன்றிணைப்பு, சகவாழ்வுடனான நாட்டை குறித்த நேரத்தில் ஜனநாயக ரீதியாக பொறுப்புடன் அனித உரிமைகளை பாதுகாக்க முன்வருவோம்.

# இன்றைய சமுதாயத்தினுள் பெண்கள் அணுகுமுறைகளை மாற்றி முன்வர வேண்டும்

இலங்கையில் காணப்படுகின்ற சனத்தொகையில், 53 வீதமே பெண்களென புள்ளிவிபரவியல் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றன. ஆனாலும் அறிவு மற்றும் தொழிநுட்ப ரீதியிலும் பெண்கள் உயர்மட்டத்தில் காணப்படுகின்றனர். வெவ்வேறு உயர்மட்டங்களிலுள்ள தொழிலிலும் பெண்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். உலகில் 195 நாடுகள் உள்ளன. இதனுள் பெரும்பாலான நாடுகளில் பெண்களிடமே அதிகாரப்பலம் காணப்படுகின்றது. பெண் என்பவன், தான் உயிர்துறக்கும் வரை தொழிலிலேயே பரபரப்புடன் செயற்படுகின்றாள்.

பெண் மிகவும் சக்திவாய்ந்தவள். அவள் பொறுமை, கருணை, இரக்கம் போன்ற பண்புகளையுடையவள். குழந்தையொன்றை பெற்றெடுப்பதில் இருந்து, அக்குழந்தை சமுதாயத்தில் ஓர் நல்ல பிரஜையாகும் வரை அவளுக்கு பாரிய கடமையொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவள் அக்கடமையை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றாள்.

பெண் என்ற ரீதியில் அவளுக்கு வரும் எந்தவொரு சவால்களையும் நிறைவேற்றுவதற்கு அவளுக்கு சக்தி உண்டு. முன்னைய காலத்தைப் போன்று அல்லாமல், நிகழ்காலத்தில் பெண்கள் உயர்ந்தளவிலான தொழிலில் ஈடுபட்டு வருவதுடன், அவளுக்குள்ள கடமைகளுக்கு முடிவே இல்லை. ஆனால் அரசியல் ரீதியாகப் பார்க்கும் போது, அங்கு அவளது பங்கு குறைவாகவே காணப்படுகின்றது. அதனால் வேறு நாடுகளைக் போன்றல்லாமல், எமது நாட்டினுள் பாராளுமன்றத்தில் பெண்களின் பங்குபற்றுதல் சதவீதம் குறைவாகவே காணப்படுகின்றது. நாம் என்னதான் ஆண்-பெண் பாலினத்தன்மை குறித்து பேசினாலும், பெண்ணை வேறுபடுத்தி பார்க்கும் பழக்கம் இன்னும் எமது சமுதயத்தில் இருந்து நீக்கப்படவில்லை.

நாம் எவ்வளவுதான் மேற்கத்தேய கலாசாரத்திற்கேற்ப மாற முயற்சித்தாலும், எமது நாட்டுப் பெண்கள் கலாசார ரீதியின்படி செயற்பட்டு, தமது குடும்ப பொறுப்புக்களில் இருந்து அவளுக்கு மீள்வதற்கு சுதந்திரம் வழங்கப்படாமைக்கு காரணம், அணுகுமுறைகளில் காணப்படும் பலவீனங்களினாலாகும்.

ஆனால், தற்போதளவில், அவள் அடிமைத்தனத்தில் மற்றும் அணுகுமுறைகளில் இருந்து விடுபட்டு நாட்டின் அபிவிருத்திக்கு சக்தியளித்து, குடும்ப பொறுப்புக்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி. தமது குடும்ப வாழ்க்கையையும் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கு பூரண பங்களிப்பை வழங்குகின்ற அவளது முயற்சியை பாராட்ட வேண்டுவது எமது கடமையாகும்.

சமந்தினி



# சட்ட அறிவு

## 1935ம் ஆண்டு 14ம் இலக்கத்தையுடைய தொழிற்சங்க கட்டளை

ஓர் சங்கத்தில் காணப்படும் சுதந்திர தன்மையானது, அடிப்படை மனித உரிமையொன்றாக கருதப்படுகின்றது. 1948ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய வெளியீட்டின் 23(4)ம் அதிகாரத்திற்கமைய அனைவருக்கும் அவர்களின் தேவைகளுக்காக தொழிற்சங்கங்களை உருவாக்குவதற்கு மற்றும் அவற்றில் இணைவதற்கு அடிப்படை உரிமை காணப்படுகின்றது. அத்தோடு இலங்கையில் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு அதிகாரமயப்படுத்தலில் 14(1) அதிகாரத்தின் மூலம் பேசுவதற்கான உரிமை, கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் போன்று, 14(1) ட அதிகாரத்தின் மூலம் தொழிற்சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கு மற்றும் அதில் இணைவதற்கு உள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 98ம் இலக்கமானது, ஒழுங்குபடுத்துவதற்கு மற்றும் பேரம் பேசுவதற்கு தொடர்பான பரிந்துரையின் நோக்கமாக இருப்பதுடன், தொழிற்சங்கங்களுக்கு எதிராக பாகுபடுத்தும் செயற்பாடுகளில் இருந்து பாதுகாத்தல், அச்சுறுத்தும் செயற்பாடுகளில் இருந்து பாதுகாத்தல், கூட்டமைப்பு பேரம் பேசுதலை மேம்படுத்தல் என்பன அடிப்படைகளாக கருதப்படுகின்றன. அத்தோடு தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் அசாதாரண தொழிலாளர் நடைமுறைகளில் இருந்து பாதுகாப்பாக இருத்தல் போன்றவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

இக்கட்டளையின் நோக்கம் யாதெனில், தொழிற்சங்கத்திற்கு மற்றும் அதன் அங்கத்துவத்திற்கு சட்ட அங்கீகாரத்தை ஏற்படுத்துவதற்காக தொழிற்சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுடன், இக்கட்டளையானது, 1935/11/01 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கட்டளையின் மூலம் தனியார் பிரிவில் சேவை செய்யும் தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள், பொது நிறுவனங்கள் மற்றும் சட்டசபை தொழிலாளர் மற்றும் அரசசபை தொழிலாளர்கள் உள்ளடக்கப்படுவர்.

### தொழிற்சங்கமொன்றின் குறிக்கோள்களாவன:

- தொழிலாளர்க்ள மற்றும் உரிமையாளர்களுக்கிடையில் அல்லது தொழிலாளர் தொழிலாளர்களுக்கிடையில் அல்லது உரிமையாளர் உரிமையாளர்களுக்கிடையில் காணப்படும் உறவை மேம்படுத்துதல்.
- தொழிற்சாலை அல்லது வியாபாரமொன்றை நடத்துவது தொடர்பாக அதற்கு வரையறுக்கப்படும் விதிமுறைகளை விதித்தல்.
- தொழில் மோதல்களில் தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் சார்பாக பிரதிநிதித்துவப்படுத்தல்.
- எந்தவொரு வியாபாரம் அல்லது தொழிற்சாலையொன்றில் நிலவும் வேலைநிறுத்தம் மற்றும் அவற்றை மூடுதல் தொடர்பானவற்றுக்கு ஆதரளித்தல் அல்லது வேலைநிறுத்தம் மற்றும் அவை மூடப்படும் காலப்பகுதியில் அதன் உறுப்பினர்களுக்கு சம்பளம் அல்லது வேறு நிவாரணங்கள் தொடர்பாக ஆதரவளித்தல் அல்லது ஒழுங்குபடுத்தல்.

தொழிற்சங்கங்களை பதிவுசெய்யும் போது தொழிற்சங்கத்திற்கு மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு சட்ட அங்கீகாரத்தன்மையை பெற்றுக் கொள்வதற்கு செயலாளர் உட்பட அதிகாரக்குழுவொன்றை நியமிக்க வேண்டும். அவர்களால் தொழிற்சங்கம் நிறுவப்பட்ட திகதியிலிருந்து மூன்றுமாத காலத்திற்குள் தொழிற்சங்கத்தை பதிவுசெய்வதற்காக தொழில் ஆணையாளரிடம், சங்கத்தின் உறுப்பினர்கள் ஏழுபேரினால் கையொப்பமிடப்பட்ட பத்திரமொன்றின் மூலம் கோரிக்கையிடப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரமயப்படுத்தலையும் முன்வைக்க வேண்டும்.

மூலம் - தொழிலாளர் சட்டகைநூல்
(தொழிலாளர் திணைக்களம்)



# பெண்கள் மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம்

பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பாக அறிவுறுத்தும் தினமானது, ஆண்டுதோறும் மாசி மாதம் 12ம் திகதி பெண்களாகிய உங்களுக்காகவே நினைவுகூறப்படுகின்றது. பெண்களாகிய நீங்கள் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கிய பிரச்சினை தொடர்பாக அறிவுறுத்தவும், பாலியல் ரீதியாக நோய்கள் பரவுவதை குறைப்பதும் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பாக அறிவுறுத்தும் தினத்தின் குறிக்கோளாகும். இதன் முக்கியத்துவம் யாதெனில், பொது மக்களை வாழ்க்கைச் சாவிலிருந்து, மீட்க வேண்டும் என்பது மட்டுமே என்பதை உறுதியாக நினைவில் வைத்திருக்க வேண்டும். பாரம்பரியமான, பழமைவாயந்த, கலாசாரம் மிக்க பெண்கள் பாலியல் ஆரோக்கியம் தொடர்பாக விழிப்புணர்வற்று இருப்பது, மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பாலியல் ஆரோக்கியம் என்பது, ஒன்றுடனொன்று தொடர்புடைய சவால்கள் மற்றும் பிரச்சினைகளை உள்ளடக்கிய பரந்த பிரிவாகும். பாலியல் ஆரோக்கிய பிரிவுக்குள் பாலியல் இன்பம், சிற்றின்பம், பாலியல் திருப்தி, நோய்கள், வன்முறை, பெண் விருத்தசேதனம், பாலியல் பலவீனம் மற்றும் பாலியல் ஆரோக்கியத்திற்குள் உள்ளடங்கும். இனப்பெருக்க ஆரோக்கியம் என்பது, இனப்பெருக்க அமைப்பு மற்றும் அதன் செயற்பாட்டை பௌதீக, உள மற்றும் சமூக ரீதியினுள் நன்றாக பராமரிக்க வேண்டும். உங்களுள் செயற்படும் இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ஆரோக்கிய புரிதலானது, உங்களது அடிப்படை உரிமை மட்டுமல்லாது கடமையுமாகும். இனப்பெருக்க அமைப்பானது, நல்ல முறையில் செயற்படுவதற்கு நிறையுணவு வேளையொன்றை பெற்றுக் கொள்ளல், இனப்பெருக்க உறுப்புக்களை நாள்தோறும் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் மற்றும் சுத்தமான ஆடைகளை பயன்படுத்துதல் என்பன தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். பாலியல் உறவைப் பேணுதல் என்பது, பெண்களாகிய உங்களின் உரிமையொன்றாவதுடன், அது ஓர் தவறல்ல. இலங்கை சட்டத்திற்கமைய 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பாலியல் உறவை மேற்கொள்வது தொடர்பாக தீர்மானமெடுக்கும் உரிமை காணப்படுகின்றது. பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்தின் போது, பாதுகாப்பான பாலியல் உறவை பேணுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்கள் தொடர்பாக அறிந்திருத்தல் நன்று.

பாதுகாப்பற்ற பாலியல் உறவின் போது, பெண்களாகிய நீங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் இரண்டு உள்ளன. அவை, எதிர்பாராத கருத்தரிப்பு மற்றும் பாலியல் தொடர்பான நோய்கள் ஆகும். பெரும்பாலான பெண்கள் எதிர்பாராமல் மேற்கொள்ளப்படும் கருத்தரிப்பை தடைசெய்வதற்காக கருக்கலைப்பை மேற்கொள்வது ஒரு வழக்கமாக காணப்படுகின்றது. இலங்கை சட்டத்திற்கமைய, கருக்கலைத்தலானது, சட்டவிரோத செயலாவதுடன், தண்டனைக்குரிய குற்றமாகும். பாரம்பரிய, பழமைவாய்ந்த மற்றும் கலாசார ரீதியில் பங்குதாரர்களாகிய நீங்கள் இதை எந்தளவுக்கு நியாயப்படுத்துவீர்கள் என்பது கேள்விக்குரிய விடயமாகும். இன்னுமொரு வகையில், பதிவுசெய்யப்படாத வைத்திய நிலையத்தில் கருக்கலைப்பானது, ஏற்றுக் கொள்ளப்பட்ட வைத்தியமுறைப்படியல்லாது, சரியான உபகரணங்களை பயன்படுத்தாது கருவொன்றை கலைப்பது பிரசித்தமான இரகசியமொன்றாக கருதப்படுகின்றது. அதனூடாக கர்ப்பப்பை பாதிப்படைவது மற்றும் இரத்த கசிவு என்பன ஏற்பட வாய்ப்புள்ளது. அவசர நேரத்தின் போது, தேவையற்ற மற்றும் எதிர்பாராத விதமாக கருத்தரிப்பை தடுப்பதற்காக 72 மணித்தியாலத்திற்குள் பொஸ்டினோர் ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் உபயோகிக்கலாம். இது சாதாரண குடும்ப கட்டுப்பாட்டு முறை அல்லாததுடன், அடிக்கடி பயன்படுத்துவதும் உகந்ததல்ல. ஆண், பெண் வேறுபாடின்றி, பாதுகாப்பற்ற உடலுறவின் போதும் பாலியல் நோய்கள் ஏற்படவும் இது வழிவகுக்கும். பாலியல் ரீதியாக தொற்றக் கூடிய நோய்களுள் ஹேர்ப்ஸ் சிம்பிலெக்ஸ் (Herpes Simplex), சிபிலிஷ், க்லெமீடியா தொற்று, HIV/AIDS, கொனேரியா, டிரைகோமோனாசிஸ் தொற்று, பிறப்புறுப்பு மருக்கள் என்பன உள்ளடங்கும். நோய்த்தொற்றுக்கு உள்ளாக்கப்படுவதற்கு முன், பாதுகாப்பான சுகாதாரத்தை பேணுதல் பாராட்டத்தக்க விடயமாகும்.

பாதுகாப்பற்ற பாலியல் உறவு மேற்கொள்ளப்படுவதிலிருந்து, பாதுகாப்பான பாலியல் உறவொன்றுக்குள் உள்ளாகும்போது, குடும்ப கட்டுப்பாட்டு முறையை மேற்கொள்வது சிறந்ததாகும். முன்னயை காலத்திலிருந்தே குளவி பாதுகாப்பு மற்றும் நினைவுச்சின்னங்களை பாதுகாத்தல் போன்ற பாரம்பரிய சம்பிரதாயமுறையினை மேற்கொண்டாலும், தற்காலத்தில் தற்காலிக மற்றும் நிரந்தர முறையிலான தொழிநுட்ப ரீதியான முறையினை கையாண்டு வருகின்றனர். தற்காலிக ஓமோன் முறையுடன் விழுங்கக்கூடிய மாத்திரைகள் மற்றும் ஓமோன் மாத்திரைகளும், ஓமோன் அல்லாத முறைகளில் லூப் முறை மற்றும் ஆணுறைகள்( கொண்டம்) பயன்படுத்தப்படுகின்றன. பெண் கருத்தடை சிகிச்சை மற்றும் ஆண் கருத்தடை ஆகியன நிரந்தர குடும்ப கட்டுப்பாட்டு முறைகளாகும். ஆடைத் தொழிற்சாலையில் பெண்களாகிய நீங்கள் கருக்கலைப்பில் ஈடுபடுவது சுலபமான விடயமொன்றாக கருதப்பட்டாலும், பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான அறிவு உங்களிடம் காணப்படுவதால், சிறப்பான முறையில் பெண் உடலமைப்பை பாதுகாக்க வேண்டியது, உங்களுக்கே உரிய கடமையும், பொறுப்புமாகும்.

யசாரா விதுமிணி

# சர்வதேச மகளிர் தினம் 2023



ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் 8ம் திகதியில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஆண்-பெண் சமத்துவம், இனப்பெருக்க உரிமைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் கவனத்தை செலுத்தி, இத்தினம் கொண்டாடப்படுகின்றது. இதன் இவ்வருட கருப்பொருளாவது, “சமத்துவத்தை தழுவுவோம்” என்பதாகும்.

உங்களுக்கு தெரியுமா? சர்வதேச மகளிர் தினமானது, ஐக்கிய நாடுகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட வருடாந்த விழாவாக முன்னேற்றமடைந்தது, தொழிலாளர் வியாபாரத்தினூடாகும். தாம் வேலை செய்யும் மணிநேரத்தை குறைக்குமாறும், நல்லதொரு ஊதியத்தை பெற்றுத்தருமாறு கோரியும், வாக்குரிமை பெற்றுத்தருமாறு வேண்டியும் சுமார் 15000 பெண்கள் நிவ்யோர்க் நகரில் மேற்கொண்ட அணிவகுப்பின் பிரதிபலனாக, 1908ம் ஆண்டானது அதன் ஆரம்பமாக இருந்தது. ஓராண்டிற்குப் பின், அமெரிக்காவில் சோசலிச கட்சிகள் முதலாவது தேசிய மகளிர் தினத்தை பிரகடனப்படுத்தினர். எவ்வாறாயினும், இந்த சர்வதேச மகளிர் தினம் முதன்முறையாக 1911ம் ஆண்டில் கொண்டாடப்பட்டதுடன், இவ்வாண்டு நாம் கொண்டாடியது, 112ம் ஆண்டு கொண்டாட்டமாகும்.

தற்போதளவில், பெண்கள் தமது உரிமைகளுக்காக குரலெழுப்ப ஆரம்பித்திருப்பதுடன், கடந்த வருடங்களில் ஆப்கானிஸ்தான், ஈரான், யுக்ரேன் மற்றும் அமெரிக்கா போன்ற பெரும்பாலான நாடுகளில் பெண்கள் தமது நாட்டினுள் இடம்பெற்ற போர்,யுத்தம், வன்முறைகள் மற்றும் கொள்கைமாற்றம் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களின் உரிமைகளுக்காக போராடியுள்ளனர்.

தற்காலத்தில் இலங்கையினுள் நிலவியிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது, பெண்களாவர். இலங்கைக்கு அதிகூடிய வெளிநாட்டு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரும் மூன்று பிரிவுகள் காணப்படுவதுடன், அவை வெளிநாட்டு சேவை, ஆடைத் தொழிற்சாலை மற்றும் பெருந்தோட்ட தேயிலைப் பயிர்ச்செய்கையாகும். இம்மூன்று பிரிவுகளிலும் பெரும்பாலும் தொழில்புரிவது பெண்கள் என்பதுடன், பல ஆண்டு காலமாக தீர்க்கப்படாத கடும்பல பிரச்சினைகளுக்கு தொழிலாளர்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

அவைகளில், ஆடைத் தொழிற்சாலையானது, ஆரம்பம் முதல் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வந்துள்ளதுடன், தற்போதளவில் கடுமையான கால எல்லைக்குள் வரநேர்ந்துள்ளது. ஆடைத் தொழிற்பிரிவினுள் நாட்டின் முழு தொழிற்பிரிவின் 15வீதம் தொழில்புரிவதுடன், அதில் 78வீதமானோர் பெண்களாவர். ஆனால் அப்பெண்களுக்கு கிடைக்கப்பட்டிருப்பது கீழ்மட்ட தொழிலாகும். உயர் மட்ட தொழில்கள் கிடைத்தும், தொழிலினுள் காணப்படும் ஊதிய வேறுபாடு தற்போது வரை காணக் கிடைக்கின்றது. விசேடமாக சமவேலை செய்யும் ஆண் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் ஊதியத்தை விட குறைந்த ஊதியத்தையே பெண் தொழிலாளர்க்ள பெறுகின்றனர். மகளிர் தினத்தைக் கொண்டாடும் இன்றைய நாள் வரையில், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தொழிலில் காணப்படும் பாதுகாப்பற்ற தன்மை மற்றும் அவர்கள் அனுபவித்து வரும் துன்புறுத்தல்களும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்ட தாக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாமல், தற்போது தொழிலாளர்கள் தற்கொலை முயற்சிகள் மேற்கொள்வதும் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

112வது மகளிர் தினத்தைக் கொண்டாடும் இந்நேரத்தில் நாட்டிற்கு அதிகளவில் டொலர் வருமானத்தை பெற்றுத் தரும் ஆடைத் தொழிற்சாலைப் பெண் தொழிலாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமலிருப்பது சவால்கரமானதாகும். அவ்வாறாயின், உங்களது தயவினால் மற்றவர்கள் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சிக்குமிடத்து, அவர்களுக்கு இடமளிக்காதீர்கள். உங்களுக்கு இயலுமான நேரங்களில் உங்களுக்காகவும் நேரத்தை செலவிடுங்கள்.


சுரம்யா

# சமூக சமையலறை





டாபிந்து கூட்டமைப்பினால் ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரியும் பணிப்பெண்களின் போசணை தொடர்பான பிரச்சினையை பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சமூக சமையறையானது இருபதாவது தடவைக்கு மேற்பட்ட முறையும் வெற்றிகரமாக இடம்பெற்றது. கடந்த மாசி மாதம் 9ம் திகதி கிளிநொச்சி, வவுனியா மற்றும கட்டுநாயக்க பிரதேசங்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றது. அத்தோடு மாசி மாதம் 19ம் திகதி மீண்டும் கிளிநொச்சி, வவுனியா மற்றும கட்டுநாயக்க பிரதேசங்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றது. இங்கு 350இற்கும் மேற்பட்ட பகலுணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.



# பரிந்துரைசார் குழு கலந்துரையாடல்



டாபிந்து கூட்டமைப்பினால் வடக்கிலுள்ள இரண்டாம் கட்ட • தலைவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பரிந்துரைசார் குழு கலந்துரையாடலானது, கடந்த மாசி மாதம் 2ம் திகதி கிளிநொச்சி நகரை மையமாகக் கொண்டு இடம்பெற்றது. இதற்கு 15 புதிய அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இங்கு அவர்களை அறிவுறுத்தும் செயற்றிட்டம் இடம்பெற்றதுடன், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அத்தோடு மாசி மாதம் 19ம் திகதி வவுனியா நகரை மையமாகக் கொண்டு இப்பரிந்துரைசார் குழு கலந்துரையாடல் இடம்பெற்றது. இதற்கு 13 புதிய அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.





# தலைமைத்துவ பயிற்சி செயற்றிட்டம்

வடக்கின் கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களை மையமாகக் கொண்டு இடம்பெற்ற தலைமைத்துவ பயிற்சியின் மூன்றாவது செயற்றிட்டமானது, கடந்த மாசி மாதம் 11ம், 12ம் திகதிகளில் இடம்பெற்றது. இச்செயற்றிட்டத்திற்காக வள ஏற்பாட்டாளர்களாக மனித அபிவிருத்தி நிலையத்தின் யோகேஸ்லரி மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான கார்த்திகா தனஞ்சன் அவர்கள் கலந்து கொண்டனர். இங்கு, தொழிலாளர்கள்





முகங்கொடுக்கும் ஆண்-பெண் பாலினம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் இவ்வாறான பிரச்சினைகளின் போது ஒத்துழைப்பு வழங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டதுடன், C190 பரிந்துரை தொடர்பாகவும் தொழிலாளர் சட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டன.

# போராட்டப் பேரணி

**வயிற்றுப் பசிக்கு தேவையான உணவின்றி,**
**வானளவு வாழ்க்கைச் சுமையை போக்க ஓர் கரமின்றி,**
**எமக்கான நாளை கொண்டாட நிம்மதியின்றி,**
**நடுத் தெருவுக்கு வர நேர்ந்தது வேறு வழியின்றி,**

2023ம் ஆண்டு மகளிர் தினத்தை மையமாகக் கொண்டு டாபிந்து கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட போராட்டமானது, பங்குனி மாதம் 12ம் திகதி கட்டுநாயகக, கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களை மையப்படுத்தி, இடம்பெற்றது. கட்டுநாயக்கவில் இடம்பெற்ற போராட்டமானது, டாபிந்து கூட்டமைப்பு அலுவலர்கள் உட்பட சுதந்திர வர்த்தக வலயத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன், கட்டுநாயக்க, பியகம ஆகிய சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் கூட்டமும் இதற்காக கைகோர்த்து கலந்து கொண்டனர்.

அத்தோடு இதனுடன் இணைந்து டாபிந்து கூட்டமைப்பினால் கிளிநொச்சி மற்றும் வவுனியா பிரதேசங்களிலும் இப்பேரணி இடம்பெற்றது. இதன் பிரதான நோக்கமாக இருந்தது யாதெனில், நிகழ்கால பொருளாதார நெருக்கடியுடன் பெண்கள் முகங்கொடுக்கும் சவால்கள் தொடர்பாகவும் ஆட்சியாளர்களுக்கு தெரிவுபடுத்தும் நோக்கில் மற்றும் C190 பரிந்துரையை அங்கீகரிக்குமாறும் வேண்டி இடம்பெற்றது.






1ஆம் பக்கத் தொடர்ச்சி **மகளிர் தினக்...**

சுமையை தாங்குவதற்கு இனிமேலும் தொழிலாளர்களால் இயலாது என்பதையும் குறிப்பிட்டார்.

மேலும், டாபிந்து கூட்டமைப்பின் கட்டுநாயக்க பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, செல்வி. • தினேஷா பர்னாந்து உரையாற்றினார். அவர் தனது உரையில் தற்போதளவில் தொழிலாளர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் குறித்து தமது கருத்தை தெரிவுபடுத்தினார். விசேடமாக நிகழ்கால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தொழிற்சங்கங்களை மூடுதல், தொழிலில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை, பொருட்களின் விலைகளில் ஏற்படும் உயர்வு மற்றும் இவற்றுக்கு மத்தியில் அவர்கள் முகங்கொடுத்து வருகின்ற சிரமங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டார். பியகம சுதந்திர வர்த்தக வலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, அஷோக மாலா அவர்களும் தமது அனுபவகருத்தை பகிர்ந்ததுடன், பணியிட வேலை மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கு தங்களுக்கு நேரம் செலவிடப்படுவதுடன், தம்மைப் பற்றி சிந்திப்பதற்குக் கூட அவர்களுக்கு நேரமில்லையென்றும், இவர்கள் மிகக் குறைந்த சம்பளத்திற்கே வேலை செய்து வருவதுடன், அங்கு அவரது உரிமையாளர்கள் இலட்சக்கணக்கில் இலாபம் ஈட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். தாம் பெறும் ஊதியத்தின் மூலம் வாழக்கூடிய ஓர் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியாதென்றும் அதற்காக தாம்தான் முன்வர வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

அன்றையதினம் விசேட பிரதம அதிதியாக மனித உரிமைகள் செயற்பாட்டாளரான பூமி ஹரேந்திரன் அவர்கள் தனது உரையை சபைக்கு முன்பாக வழங்கினார். தமது கருத்தை முன்வைக்கையில் அவர், பெண்ணின் பலம் பற்றி சுட்டிக்காட்டினார். அத்தோடு உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராடுவதற்கு இரு வழிமுறைகள் காணப்படுவதாகவும், அவற்றுள் முதலாவதாக ஆயுதப் போர் மற்றும் கை,கால்கள் மூலம் பௌதீக சக்தியை பயன்படுத்தி தாக்குவது மற்றும் இரண்டாவதாக, தமது புத்திசாலித்தனத்துடன் நிலைத்து நிற்றல் என்பனவாகும். இதில் தடைகள் வரும்போது மாற்ற வேண்டியது, நோக்கத்தை அல்ல, மாறாக நோக்கத்தை நோக்கி பயணிக்க வேண்டிய பாதையையாகும். நாம் சட்டத்திற்கு வெளியே சென்று சிந்திக்க வேண்டும். மேலும் அவர் தெரியப்படுத்தியது யாதெனில், எமது உரிமைகளை நாம் வென்றெடுப்பதற்கு நாம் முதலில் நமக்குரிய கடமை, பொறுப்பக்களை முறையாக நிறைவேற்ற வேண்டும். உலகிலுள்ள மனித உரிமைகள் அனைத்தையும் போராட்டம் மற்றும் அர்ப்பணிப்பின்றி பெற முடியாது என்பதாகும். அதன் மூலம் தமது பிரச்சினைகளை மறந்து, பொது பிரச்சினைக்காக செயற்பட்டு இன்னுமொருவரின் துன்பத்தில் அவருடன் பங்கு கொள்வது மேன்யைான செயல் என்பதுடன், எம் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் இறைவன் குடியிருக்கின்றார் என்றும் கூறினார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்விற்கு ரதிதேவி அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், அவர் C190 பரிந்துரை தொடர்பாக. டிஜிட்டல் தொழிநுட்பம் தொடர்பாக மற்றும் தொழிற்சாலையினுள் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கருத்துக்களை முன்வைத்தார். அத்தோடு எமது டாபிந்து கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினரான நிக்சன் அவர்கள், பெண்கள் முகங்கொடுக்கும் துன்புறுத்தல்கள் மற்றும் தற்போதளவில் பெண்கள் சந்திக்கின்ற சவால்கள் தொடர்பாகவும் தமது கருத்தை தெரியப்படுத்தினார். வெவ்வேறு நடன நிகழ்வுகள் மட்டுமன்றி, தொழிற்சங்கங்களில் நிலவி வரும் பிரச்சினைகள் குறித்தும் எமது சகோதர, சகோதரிகள் தமது கருத்தைப் பகிர்ந்து கொண்டமை இதன் சிறப்பம்சமாவதுடன், போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையும் இங்கு விசேடமாகும்.

வவுனியா நிகழ்விற்காக சமூக செயற்பாட்டாளர் எலிசபெத் அவர்கள் கலந்து கொண்டார். அவரது உரையில் அவர், மகளிர் தினத்தின் முக்கியத்துவம் பற்றியும் பெண்களுக்கு நிகழும் துன்புறுத்தல்கள், ஆடைத் தொழிற்சாலை பெண்கள் முகங்கொடுக்கும் துன்புறுத்தல்கள் மற்றும் அவற்றுக்கு முகங்கொடுக்கும் விதம் தொடர்பாகவும் கருத்துக்களை தெரிவித்தார். அத்தோடு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெறுதல் தொடர்பாகவும் அவரது கருத்தை முன்வைத்தார். அத்தோடு பெண்கள் என்ற ரீதியில் கல்வியைப் பெறுவதன் முக்கியத்துவத்தையும் பற்றி கருத்து முன்வைத்தார். அத்தோடு டாபிந்து கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட தொழிலாளர்களுள் ஒருவரான ஏஞ்சல் அவர்கள் உரையாற்றினார். அவர் தனது உரையில் பெண்கள் என்ற ரீதியில் தமக்கு எவ்வித சுதந்திரம் கிடைப்பதில்லையென்றும், அவர் முகங்கொடுக்கும் பிரச்சினை தொடர்பாகவும் தம் கருத்தை தெரிவித்தார். அத்தோடு வவுனியா மாவட்ட தொழிலாளர்களுள் ஒருவரான விஜிதா அவர்கள் கவிதையொன்றை நிகழ்த்தினார்.

இவ்வருடம் மகளிர் தினத்தை மையப்படுத்தி, டாபிந்து கூட்டமைப்பினால் அனைத்து பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி, டிக்டொக் போட்டி இடம்பெற்றதுடன், அதில் முதலிடத்தை கிளிநொச்சி மாவட்டமும், இரண்டாம் இடத்தை வவுனியா மாவட்டமும், மூன்றாம் இடத்தை பியகம மாவட்டமும் தக்கவைத்துக் கொண்டன.

# வெளிநாட்டுச் செய்தி

ஆடைத்துறையில் துருக்கி தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் தொழில் பாதகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த மாதம் துருக்கி மற்றும் சிரியாவுக்கு விதிக்கப்பட்ட அழிவை ஏற்படுத்திய பூமியதிர்ச்சியானது, துருக்கியில் உள்ள ஆடைக்கடை மற்றும் ஆடை உற்பத்தி அதிகமாகக் காணப்படும் வர்த்தக வலயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது. பிரதேசத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சந்தைத் தரங்கள் (பிராண்டுகள்), தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் துருக்கி அரசுடன் இணைந்து பூமியதிர்சிசியினால் ஏற்பட்ட வேதனைகள் பேரில், தொழிலாளர்கள் மேலதிக நிதி சிரமங்களுக்கு முகங்கொடுக்கா வண்ணம் நாம் உறுதியளிக்க வேண்டும். நாம் சந்தைத் தரங்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளிடமிருந்து அவர்களின் வழங்குனர்களுக்கு குறித்த நேரத்தில் பணத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். தொழிலாளர்களுக்கு அவர்களின் முழுமையான, வழக்கமான ஊதியம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக மற்றும் தொழிற்சாலைகள் பாதுகாப்பாக இருப்பதென்பதை உறுதிப்படுத்தும் வரை மீண்டும் அவற்றை திறக்காமல் இருப்பதற்கு செயற்பட வேண்டும்.

பெரும்பாலான தொழிற்சாலைகள் கவனயீனம் காரணமாக, மீண்டும் சீக்கிரம் திறக்கப்பட்டிருந்ததுடன், தாமதமாகிய ஆர்டர்களை விநியோகிப்பதற்காக சந்தைத்தரங்களினால் நிதியானது தண்டிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் எண்ணி, பயந்து இவற்றை செய்திருப்பார்கள். அவர்களுள் பெரும்பாலானோர் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் வீடுகளை இழந்திருப்பதுடன், முதலாவது பூமியதிர்ச்சி ஏற்பட்டு ஒரு வாரங்களின் பின்னர், அவர்களை மீண்டும் தொழிலுக்கு சமூகமளிக்குமாறு தொழிற்சாலையின் உரிமையாளர்கள் கூறியிருந்தார்கள். அழிவு ஏற்பட்ட பின், பிரதேசத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு சுதந்திரமாக தொழிற்சாலையில் இருந்து வெளியேறுவதற்கு இடமளிக்கப்படவில்லை தொடர்பில் செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது.

**இங்கு எதிர்ப்பார்க்கப்படுவது யாதெனில்,**

1. **தொழிலிருந்து நீக்குதல் தொடர்பாக சட்டரீதியான தடையை பொருட்படுத்தாது, தொழிலை இழக்க நேரிடும் தொழிலாளர்களுக்கு அவர்களின் பூரண விலகலை வழங்குவதாக உறுதிப்படுத்தல்.**
2. **தொழிலாளர்களுக்காக ஊதியத்தை கடுமையாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாக உறுதிப்படுத்தல்.**
3. **ஆர்டர் அல்லது முன்பதிவுகளுக்காக முழுமையாக மற்றும் குறித்த நேரத்தில் மற்றும் எவ்வித தாமத தடைகளுமின்றி ஏற்றுக் கொள்வதாக தொடர்பாடல்க்ள மேற்கொள்ளல்.**
4. **தேவையான நேரங்களில், போடிங்கில் தங்கியிருக்கும் தொழிலாளர்களுக்கு வாடகை செலவுகளுக்காக ஒத்துழைப்பதற்கு வழங்குனர்களுடன், இணைந்து வேலை செய்தல் மற்றும் துண்டிப்பதற்கு மற்றும் காயமடைநத தொழிலாளர்களுக்கு மற்றும் இறந்து போன தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ கட்டணம் மற்றும் வருமானம் இழக்கப்படுவதனால் இழப்பீட்டுப் பணம் வழங்குவதான உறுதிப்படுத்துதல்.**
5. **உயிரிழந்த பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலைகளை பொறியியலாளர்களின் பூரண தலையீடு மற்றும் பரிசோதனையின்றி திறவாமல் இருத்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.**
6. **வலயத்தில் உள்ள சிரியா நாட்டு அகதிகளுக்கு பாகுபாடு காட்டுவதற்கு எதிராக போராடுவதற்கு முன்னணி வழங்குநர்கள் மற்றும் துருக்கி அரசுடன் அவர்களின் விளைவுகளை பயன்படுத்துதல்.**

**இணையத்தின் மூலம் பெறப்பட்டது.**

# ஆரோக்கியம்

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் 4ம் திகதி உலக புற்று நோய் தினம் கொண்டாடப்படுகின்றது. 2000ம் ஆண்டில் உலக புற்று நோய் தினம் முதன்முதல் கொண்டாடப்பட்டதுடன், உலக புற்றுநோய் தினத்தின் நோக்கம் யாதெனில், நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் புற்று நோயினால் ஏற்படும் கடுமையான தாக்கவிளைவை குறைத்துக் கொள்வதன் மூலம் புற்று நோயை தடுத்தல், தாமதமாக நோய் அறிகுறிகளை கண்டறிதல் மற்றும் சரியான சிகிச்சையை பெற்றுக் கொள்வதன் மூலம் இயன்ற வரை நற்சுகத்தை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் உலக மக்களை அறிவுறுத்துவதற்கும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

தற்காலகட்டத்தில், புற்று நோய் மரணங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆண்டுதோறும் புதிதாக இனங்காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன. 2008ம் ஆண்டில் இனங்கானப்பட்ட 12.4 மில்லியன் நோயாளிகளின் எண்ணிக்கையானது, 2012ம் ஆண்டில் 14.1 மில்லியன் வரை உயர்டைந்துள்ளது. அதே போன்று, புற்று நோய் மரணமும் 2012ம் ஆண்டில் 8.2 மில்லியனாக இருந்ததுடன், 2018ம் ஆண்டில் 9.6 மில்லியனாக உயர்வடைந்துள்ளது. உலக சுகாதார அமைப்பிற்கமைய, புற்ற நோய் மரண வீதங்களின் எண்ணிக்கையானது இதே வீதத்தில் அதிகரித்துக் கொண்டே செல்லுமாயின், 2040ம் ஆண்டாகும் போது மரண வீதங்களின் எண்ணிக்கை 16.3 ஆக உயர்வடையும் சாத்தியம் காணப்படுகின்றது.

புற்றுநோயினால் ஏற்படும் மரணங்கள் அதிகரிக்கப்பட்டாலும், அதில் 40 வீதமளவுக்கு உயிரைக் காப்பாற்ற முடியும். புற்று நோயினால் ஏற்படும் மரணத்தை குறைத்துக் கொள்வதற்கு செய்ய வேண்டியது யாதெனில், புற்று நோயை தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், தாமதமாக நோய் அறிகுறிகளை கண்டறிதல் மற்றும் உயர்மட்ட பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் போன்றவை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

**புற்று நோயைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டியது யாதெனில்,**

- **புகையிலை பாவனையை முற்றாக தவிர்க்க வேண்டும்.**
- **சுகாதாரமான உணவுகளை உட்கொள்ள வேண்டும்.**
- **உயரத்திற்கேற்ற நிறையைப் பேணுதல் மற்றும் தினமும் உடற்பயிற்சியில் ஈடுபடுதல்**
- **புற்றுநோய் பரவக்கூடிய தொற்றுநோய்களை கண்டறிந்து அதற்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளல்.**
- **பாதுகாப்பற்ற பாலியல் செயல்களை தவிர்த்தல்.**
- **அடிக்கடி சுகாதார பரிசோதனைகளில் ஈடுபடுதல்.**

போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு நாட்பிந்திய புற்றுநோய் அறிகுறிகளை கண்டறிவதற்கு மெமோகிரபி பரிசோதனை மூலம் மார்பகப் புற்றுநோயையும், பெப் மற்றும் கொல்போஸ்கொபி பரிசோதனை மூலம் கர்ப்பப்பை புற்றுநோயையும் PSA இரத்த பரிசோதனை மூலம் புரொஸ்டேட் புற்றுநோயையும் மற்றும் வெற்றிலை உட்கொள்ளும் போது, சிகரெட் பாவனை மற்றும் மது அருந்துபவர்களின் வாயினூடாக பரிசோதனை செய்வதன் மூலம் வாய்ரீதியான புற்றுநோயையும் கண்டறியலாம். இவ்வாறு இனங்காணப்பட்டால் புற்றுநோயை முழுமையாக இல்லாதொழிக்க முடியும். வைத்திய பரிசோதனையின் மூலம் மாத்திரமே புற்றுநோயை குணப்படுத்த முடியும். ஆகையால் உங்களுக்கும் ஏதேனும் சந்தேகம் இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.

**சஸ்கா ஷாஜகான்**

(இணையத்தினூடாக எடுக்கப்பட்டது)

# எமது எண்ணம்

ஆடைத்தொழிற்சாலைக்கு தற்போது கெட்டகாலம் மலர்ந்துள்ளது. அதனுள் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் எமக்கு டொலர் நெருக்கடி காரணமாக ஆடைத் தொழிற்சாலை வீழ்ச்சியடைந்துள்ளது. சில தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான காரணங்களால் இங்கு தொழில் செய்யும் தொழிலாளர்கள் தாம் தமது தொழிலை எப்போது இழக்க நேரிடுமோ என்ற பயத்துடன் வாழ்கின்றார்கள்.

சில தொழிற்றாசலைகளில் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு மாத சம்பளத்தை மட்டும் வழங்கி, ஒரு மாத விடுமுறையும் கொடுத்துள்ளனர். வேறு கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையினால், நாம் எவ்வாறு போடிங் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளை பார்த்துக் கொள்வது என்ற மன வேதனையில் வாழ்கின்றார்கள்.

பங்குனி மாதம் 8ம் திகதி எமக்கான தினமாகும். அன்றைய தினம் அனைத்து பெண்கள் கூட்டமைப்பும் எமக்காக போராடினாலும், அரசாங்கத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கவனியாது இருக்கின்றார்கள். எமக்கு வழங்கப்படுவது கண்ணீர்ப்புகை மட்டுமே. நாம் மட்டுமன்றி, இந்நாட்டினுள் வாழும் விவசாய, பெருந்தோட்ட தொழிலாளர்கள், தமது உழைப்பிற்கு ஏற்ற, வாழ்வதற்கு ஏதுவான ஊதியத்தை வேண்டியே போராட்டத்தில் ஈடுபட்டு தம் குரலை எழுப்புகின்றார்கள். ஆனால் பொலிஸினரை வைத்து தொழிலாளர்களை அடக்குமுறைறப்படுத்துவதுதான் நிகழ்கின்றது. சுகபோக வாழ்க்கை வாழ்பவர்களுக்கு இவ்வாறான பிரச்சினைளக் குறித்து கவலையேதும் கிடையாது. ஏழையரின் கஷ்டம் ஏழைகளுக்கு மட்டும் தான் புரியும்.

பொருட்களின் விலை தொடர்பில் கட்டுப்பாட்டு விலையேதும் விதிக்கப்படவில்லை. இருக்கிறவன் உண்பான். இல்லாதவன் நக்குவான் என்பார்களாம்.

சித்திரை புதுவருடமும் அண்மித்து விட்டது. முன்பெல்லாம் கடைகளுக்குச் சென்று உற்றார் உறவினர்களுக்கும் புத்தாடைகள் வாங்கி, ஊருக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமாகுவோம். ஆனால் இம்முறை அவ்வாறு முடியாது. ஆடை, நகைகளின் விலைகளைக் கேட்டாலே ஆச்சரியமாக இருக்கின்றது. கட்டுப்பாட்டு விலையின்றி, வியாபாரிகள் தமக்கு விரும்பிய விலைகளை கூறுகின்றார்கள். அம்மாவும் இவ்வாறு எழுதியனுப்பியிருந்தார் மகளே, மகளே, இம்முறை அக்கம் பக்கம் வீட்டாருக்கு பாற்சோறு, பலகாரங்கள் கொடுப்பதற்கு வழியில்லை. அரிசி, தேங்காய்களின் விலைகளைக் கேட்டாலே என்று, மற்றைய நாளெல்லாம் சம்பளம் எடுத்ததும், வீட்டிற்கு மேலதிகமாகவும் பணம் அனுப்புவேன். இம்முறை கிடைக்கின்ற சம்பளமும் குறைவு தான். பஸ் போக்குவரத்துச் செலவு அதைவிட அதிகம். என்னதான் இருந்தாலும், புத்தாண்டிற்கு போகாமல் இருக்க முடியாது தானே, பெற்றோர், சகோதரர்களை பார்ப்பதற்கு, இருப்பவற்றை எடுத்துச் செல்வேன். கடந்நதைப் பற்றி சிந்திப்பதன் பயன்தான் என்ன?

சமந்தினி



# புத்தாண்டிற்கு சம்பளம்கூட கிடைக்கப்பெறாத ஆடைத்தொழிற்சாலைப் பெண்கள்

நாளுக்கு நாள் பாதிக்கப்படும் தொழிற்சாலையைப் போன்று, தொழிற்சாலைப் பெண்கள் மூலம் எமக்கு கேள்விப்படுவது மிகவம் கவலைக்குரிய செய்திகளாகும். புத்தாண்டுப் பிறப்பிற்கு சிறிது காலமே இருக்கின்ற இந்நேரத்தில் பியகம வர்த்தக வலயத்தில் இருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் யாதெனில், அத்தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளமும் இன்னமும் வழங்கப்படவில்லை என்பதுதான்.

அத்தோடு நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமாக ஆடைத் தொழிற்சாலையில் உள்ள "ஸ்மார்ட் ஷர்ட்" நிறுவனமானது சமீபத்தில் கொட்டதெணியாவ பிரதேசத்தில் அமைந்துள்ள கிளையில் 350 தொழிலாளர்களை கட்டுநாயக்க தொழிற்சாலைக்கு மாற்றி இந்நிறுவனத்தை மூடினார்கள். ஐந்து வருடங்களுக்கு குறைவாக தொழில்புரியும் ஊழியர்களுக்கு இழப்பீட்டு சூத்திரத்திற்கமைய, இழப்பீட்டு பணம் வழங்கியதாகவும் ஊழியர்கள் தெரிவித்தார்கள். இம்முறை சலுகை கொடுப்பனவுகளும் தடைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த தொழிலாளர்கள் நிறுவனத்தினுள் தொழிலாளர்களுக்கு கடும் சொற்களால் திட்டியதாகவும், உற்பத்திப் பிரிவு பொறுப்பாளரினால் பெண்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அத்தோடு கட்டுநாயக்க வர்த்தக வலயத்திலிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற செய்தி, புத்தாண்டிற்காக தமது வீடுகளை நோக்கி செல்வதற்கு வழங்குகின்ற போக்குவரத்துக் கட்டணங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு ஒருசில தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு வழங்குகின்ற போனஸ் கொடுப்பனவுகள் பற்றி இதுவரை தகவர் ஏதும் கிடைக்கப்பெறவில்லையென எமக்கு அறியக் கிடைத்தது. மேலும், இலங்கையில் உயர்வடைகின்ற பொருளாதார நெருக்கடியுடன் தொழிலாளர்களுக்கு வழங்கவிருந்த கொண்டாட்ட கொடுப்பனவுகள் மற்றும் புத்தாண்டுப் பரிசுகளும் கொடுக்கப்படவில்லை.

மேலும், இரண்டு வாரங்களுக்கு மட்டும் விடுமுறையென கூறி விடுமுறையைப் பெற்றுக் கொண்ட தொழிலாளர்கள், எந்தவொரு விவாதங்களுமின்றி, தனக்குரிய உற்பத்திப்பிரிவுகளோடு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளாது, தொடர்ந்து 148 நாட்கள் தொழிற்சாலையை மூடி தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுப் பணம் வழங்கி, அவர்களை வேலைநீக்கம் செய்துள்ளனர். எவ்வாறாயினும், இவ் இழபீட்டுப் பணம் வழங்கியது, இழப்பீட்டுச் சூத்திரத்திற்கு அமைவாகவா என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். தற்போதளவில் அந்நிறுவனத்திற்கு வரையறுக்கப்பட்ட ஊழியர்களை கொண்டு மற்றும் புதிய தொழிநுட்ப பயன்பாட்டுடன் மீளவும் ஆரம்பித்துள்ளதுடன், வரையறுக்கப்பட்ட ஊழியர்கள் காணப்படுவதால், அவர்களுக்கான அடைவு மட்டம் (டார்கட்) அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்காக இவர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை. அத்தோடு வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிராளர்கள் தற்போது வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பதுடன், பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்குச் சென்று பணிப்பெண் சேவையில் ஈடுபட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அத்தோடு கட்டுநாயக்க பிரதேசத்தில் பதிவாகிய மற்றொரு விடயம் யாதெனில், தற்போது போடிங் கட்டணம் மற்றும் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாரிய செலவொன்றை ஏற்க வேண்டியிருப்பதாகும். மேலதிக நேர கொடுப்பனவின்மையால் அவர்கள் பெறும் சம்பளமானது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு போதாமலிருப்பதாகவும் தெரிவித்தனர். அத்தோடு வடக்கில் பதிவாகிய தகவல் யாதெனில், ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 10,000 ரூபாவாக குறைக்கப்போவதாக அறிய கிடைத்தது.

சஸ்கா ஷாஜகான்

# டாபிந்துவினால் வர்ணமயமாக்கப்பட்ட அவளுக்கான தினம்

























இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.